# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 08 | சைவநெறி<br>சுட்டெண் : ...................................................... | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. ஓம் என்னும் பிரணவ மந்திரப் பொருளாக விளங்குபவர்
   1) முருகன் 2) விநாயகர்
   3) சிவபெருமான் 4) திருமால்

02. இறைவன் அடியவர்களுக்காக திருமணம் புரிந்த நாள்
   1) ஆனி உத்தரம் 2) சித்திரைப் பரணி
   3) பங்குனி உத்தரம் 4) வைகாசி விசாகம்

03. நாள்மங்கலம் என்று அழைக்கப்படுவது
   1) திருமணம் 2) உபநயனம்
   3) பிறந்தநாள் 4) புதுமனைபுகுதல்

04. சூரியன் மேடராசியில் புகும் போது கொண்டாடப்படும் பண்டிகை.
   1) தைப்பொங்கல் 2) தீபாவளி
   3) ஆடிப்பிறப்பு 4) சித்திரை வருடப்பிறப்பு

05. எட்டாந் திருமுறையில் அடங்கியுள்ள நூல்
   1) திருமந்திரம் 2) திருவாசகம்
   3) திருவிசைப்பா 4) திருப்பல்லாண்டு

06. நித்திரை கொள்ளாது விழித்திருந்து அனுட்டிக்கப்படும் விரதம்
   1) நவராத்திரி 2) சிவராத்திரி
   3) ஆனி உத்தரம் 4) வைகாசி விசாகம்

07. திருக்காளத்தி நாதருக்கு ஆகம விதிப்படி பூசை செய்தவர்
   1) கண்ணப்பர் 2) சிவகோசரியார்
   3) நாணன் 4) மாறநாயனார்

08. ஞான காண்டத்தில் அடங்கும் வேதத்தின் பகுதி
   1) பிராமணங்கள் 2) உபநிடதங்கள்
   3) சங்கிதைகள் 4) ஆரணியங்கள்

09. திருத்தொண்டர் தொகையை அருளியவர்
   1) சுந்தரர் 2) சேக்கிழார்
   3) நம்பியாண்டார்நம்பி 4) திருநாவுக்கரசர்

10. திருநாவுக்கரசர் முத்தியடைந்த தினம்
   1) சித்திரைச் சதயம் 2) வைகாசிமூலம்
   3) ஆனிமகம் 4) ஆடிச்சுவாதி


kalvi.lk

11. இதிகாச நூலாக விளங்குவது
1) தேவாரம்
2) மகாபாரதம்
3) பெரியபுராணம்
4) ஆகமம்

12. கடவுளின் வியாபகத்தைக் குறிப்பது
1) ஈச உபநிடதம்
2) கட உபநிடதம்
3) தைத்திரிய உபநிடதம்
4) சாந்தோக்கிய உபநிடதம்

13. மனித உடலமைப்பில் கழுத்தைக் குறிக்கும் ஆலயத்தின் பகுதி
1) கோபுரம்
2) கருவறை
3) அர்த்த மண்டபம்
4) தம்ப மண்டபம்

14. தரிசன பலனைத் தருபவர்
1) வைரவர்
2) சண்டேஸ்வரர்
3) விநாயகர்
4) சிவபெருமான்

15. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை வரும் நைமித்திய கிரியை
1) மகாமகம்
2) பிரதோசம்
3) சதுர்த்தி
4) கார்த்திகை

16. பஞ்சபுராணத்தில் இறுதியாகப் பாடப்படுவது
1) தேவாரம்
2) பெரியபுராணம்
3) திருவாசகம்
4) திருவிசைப்பா

17. நிலம், நீர், தீ, காற்று என்பன
1) ஐம்பூதங்கள்
2) ஐம்பொறிகள்
3) ஐம்புலன்
4) ஐந்தெழுத்து

18. கிரியை நெறியில் வழிபாடு செய்தவர்
1) திருஞானசம்பந்தர்
2) திருநாவுக்கரசர்
3) சுந்தரர்
4) மாணிக்கவாசகர்

19. திருப்பல்லாண்டை அருளிச் செய்தவர்
1) சேந்தனார்
2) கருவூர்த்தேவர்
3) சேக்கிழார்
4) திருமாளிகைத்தேவர்

20. விழுமியங்களை கடைப்பிடிப்பதால் கிடைப்பது
1) நல்லிணக்கம் ஏற்படும்.
2) பிரச்சினைகள் வளரும்.
3) சண்டைகள் ஏற்படும்..
4) வீண்வார்த்தை பேசலாம்.

( 20 × 2 = 40 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

## பகுதி - II

முதலாம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

**01. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதுக.**

1) மண்ணினல்ல வண்ணம் ........
2) தில்லைவாழ் அந்தணர்.......
3) பாரொடு விண்ணாய் ............
4) பெருகலாம் தவம் .......
5) மிண்டு மனத்தவர்..........

( 8 × 2 = 16 புள்ளிகள்)

**02. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.**

1) ஆலயத்திற்கு செல்லும் முறையினைச் சுருக்கமாக எழுதுக.
2) பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும் முறையினை எழுதுக.
3) ஆலயத்தில் செய்யத்தக்க தொண்டுகள் யாவை?
4) ஆலயத்தில் செய்யத்தகாத செயல்கள் 3 தருக.

( 2 + 3 + 3 + 3 = 11 புள்ளிகள்)

**03. திருமுறைகள் தெய்வத் தன்மை வாய்ந்தவை.**

1) புராணம் என்றால் என்ன? இதிகாசம் என்றால் என்ன?
2) இராவணன் சாமகானம் பாடியதன் காரணம் யாது?
3) திருமுறைகளில் காணப்படும் புராணக் கதைகள் 3 எழுதுக.
4) திருமுறைகள் பாடுவதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?

( 3+ 2 + 3 + 3 = 11 புள்ளிகள்)

**04. மனித வாழ்வை மேம்படுத்த விரதங்களும் பண்டிகைகளும் உதவுகின்றன.**

1) விரதம் என்றால் என்ன?
2) உபவாசம் என்பதன் பொருள் யாது?
3) வைகாசி விசாகத்திற்குரிய சிறப்பு யாது?
4) புதுவருடப்பிறப்பில் பின்பற்றப்படும் பாரம்பரியங்கள் இரண்டு தருக.

( 2 + 3 + 3 + 3 = 11 புள்ளிகள்)

**05. சமயகுரவர்கள் இறையருள் பெற்றவர்கள்.**

1) சமயகுரவர்கள் யாவர்?
2) திருஞானசம்பந்தரின் தாய், தந்தை பெயரையும் பிறந்த நாடு, ஊர் என்பவற்றையும் தருக.
3) சுந்தரமூர்த்தி நாயனார் செய்த அற்புதங்கள் 3 எழுதுக.
4) மாணிக்கவாசகர் அருளிய நூல்கள் எவை?

( 2 + 3 + 3 + 3 = 11 புள்ளிகள்)


kalvi.lk

06. கண்ணப்பர் பெரியபுராணம் போற்றும் அடியார்களுள் ஒருவர்.

1) கண்ணப்பரின் தந்தை பெயர், இளமைப் பெயர் யாது?

2) திருக்காளத்தி நாதருக்கு கண்ணப்பர் எவ்வாறு பூசை செய்தார்?

3) சிவபாத சுந்தரனார் ஆற்றிய சமயப் பணிகள் யாவை?

4) சிவபாத சுந்தரனார் எழுதிய நூல்கள் இரண்டு தருக.

(2 + 3 + 3 + 3 = = 11 புள்ளிகள்)

07. விழுமியங்கள் மனிதனாக வாழவைப்பன.

1) விழுமியம் என்றால் என்ன?

2) விழுமியப் பண்புகள் 4 தருக.

3) மனக் கட்டுப்பாட்டை வளர்க்க உதவுவன யாவை?

4). மூன்று முறை சாந்தி சொல்வதன் காரணம் யாது,?

(2 + 3 + 3 + 3 = 11 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ்යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457